FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2021 தொகுதி 02 பெப்ரவரி

ஊடக சுதந்திரம் தொடர்பாக குறித்த மாதத்திற்குள் அறிக்கையிடப்படும் நிகழ்வுகள் மற்றும் முந்தைய மாதங்களில் நிகழ்வுற்ற சம்பவங்களின் முன்னேற்றங்கள் அல்லது நிலைமைஃபின்தொடர்வு பற்றிய சுருக்கமான அறிக்கை ஊடக சுதந்திரம் தொடர்பான கண்காணிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்படுவதுடன் அதன் தொடர்பில் ஆராய்ச்சி சுருக்கமும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்து தெரிவிக்கும் உரிமை மறுக்கப்படுதல் சம்பந்தமான நிகழ்வுகள்ஃசம்பவங்களும் இந்த அறிக்கையில் கவனத்தில்கொள்ளப்பட்டது. ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பை மேற்கொள்ளும்போது சுதந்திர ஊடக இயக்கத்தினால் தேர்தெடுக்கப்பட்ட பகுதி கூறுகளுக்கு அமைய 04 நிகழ்வுகள்/சம்பவங்கள் 2020 பெப்ரவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அதில் 03 நிகழ்வுகள்ஃசம்பவங்கள் கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் முன்னேற்ற போக்கு அல்லது பின்தொடர்வு ஆக காணப்படுகின்றது.

## பெப்ரவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்ட புதிய நிகழ்வுகள்/சம்பவங்கள்

1. கதிர்காமம் காவல்துறை அதிகாரியொருவர் கொரோனா தொற்றுக்குள்ளான சம்பவம் தொடர்பில் செய்தி அறிக்கையிட்ட லங்காதீப பிரதேச நிருபரான எம்.கே நந்தசேன குறித்த அதிகாரியினால் தொலைபேசி வாயிலாக அச்சுறுத்தப்பட்டார்.
2. வடக்கில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட எதிர்ப்பு போராட்டங்களை தடுப்பதற்காக காவல்துறையால் பிறப்பித்த நீதிமன்ற தடை உத்தரவையும் தாண்டி ஒன்றுகூடுதல் மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமையைப் பாதுகாத்தல்.(மட்டகளப்பை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மூன்று பேருக்கும் இத்தடை உத்தரவானது காவல்துறையினால் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது)
3. இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளை உள்ளடக்கிய விதமாக இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை அனுப்பிவைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
4. இலங்கையில் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 4 வருட ஆண்டு பூர்த்தியை ஒட்டி தகவல் ஆணையத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளமை.
5. எல்.ரீ.ரீ.ஈ இயக்க தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படம் உள்ளடங்கிய காணொளிப்பதிவொன்றை டிக்டொக் சமூக ஊடகத்தில் பதிவேற்றம் செய்தமை தொடர்பில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் வத்தளை பிரதேசத்தில் வைத்து காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை.

## கடந்த கால நிகழ்வுகளின் முன்னேற்ற போக்குகள்/பின்தொடர்தல்

1. முகபுத்தகத்தில் வெளியிடப்பட்ட சிறுகதை காரணமாக ஐ.சி.சி.பி. ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட எழுத்தாளரான சக்திக்க சத்குமாரவை நீதிமன்றம் நிரபராதி என தீர்பளித்து அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட வழக்கில் இருந்து அவரை விடுவித்தது.
2. 2008 ஆம் ஆண்டு தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி ஊடாக ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சியை இடைநிறுத்தியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் வெற்றிகொள்ளப்பட்டுள்ளமை.

**அட்டவணை இலக்கம்: 1 அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகள்/சம்பவங்கள் – பெப்ரவரி 2021**

| இலக்கம் | உள்ளடங்கப்பட்டுள்ள பகுதி கூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளின்/ சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 02 |
| 02 | சட்ட ரீதியான பிரச்சினை | 05 |
| | **மொத்தம்** | **07** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஓர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் இரு நிகழ்வுகள் பெப்ரவரி மாதத்தில் கண்காணிக்கபட்டதுடன், இதில் ஒரு நிகழ்வானது புதிதாக நடைபெற்றும் மற்றையது , முந்தைய காலத்தில் நடைபெற்ற நிகழ்வொன்று சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கின் சாதக பெறுபேறாகவும் காணப்படுகின்றன. முந்தைய கால நிகழ்வில்ஃசம்பவத்தில் தொடர்புபட்டவர் எழுத்தாளர் என்பதுடன் அவர் ஊடகவியலாளர் அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட முந்தைய நிகழ்வுஃசம்பவம் ஆனது கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிகழ்வாக கருதப்படுகின்றது.

**அட்டவணை 2: 2021 பெப்ரவரி: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள்/சம்பவங்கள் 02**

| இலக்கம் | நிகழ்வு/சம்பவம் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அச்சுறுத்தல் விடுத்தல் | 01 |
| 02 | கருத்து சுதந்திரத்தை இழத்தல் | 01 |
| | **மொத்தம்** | **02** |

## பெப்ரவரி மாதத்திற்கான புதிய நிகழ்வுகள்/சம்பவங்கள்:

1. **கதிர்காமம் காவல்துறை அதிகாரியொருவர் கொரோனா தொற்றுக்குள்ளான சம்பவம் தொடர்பில் செய்தி அறிக்கையிட்ட லங்காதீப பிரதேச நிருபரான எம்.கே நந்தசேன குறித்த அதிகாரியினால் தொலைபேசி வாயிலாக அச்சுறுத்தப்பட்டார்.**

   கொழும்பில் நடந்த சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட கதிர்காமம் காவல்துறையின் உயர் அதிகாரி ஒருவர் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவருடன் மேலும் இரண்டு அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்ட செய்தியானது லங்காதீப செய்திபத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமை காரணமாக குறித்த காவல்துறை அதிகாரியால் திரு நந்தசேன அச்சுறுத்தப்பட்டுள்ளார். குறித்த செய்தி பிரசுரிக்கப்பட்டதை தொடர்ந்து 2021.02.10 பிற்பகல் 12:30க்கு குறித்த அதிகாரி தொலைபேசியில் அழைத்து " ஏன் இச்செய்தியை பத்திரிகையில் பிரசுரித்தாய்? நான் குணமடைந்து வந்து உங்களை பார்த்துக்கொள்கிறேன்" என்ற தொனியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். அது தொடர்பில் திரு நந்தசேன அவர்கள் கதிர்காமம் காவல்துறை பொறுப்பதிகாரி (OIC), உதவி பொலிஸ்மா ஆணையாளர் ,தங்கல்ல பிரிவிற்குற்பட்ட உயர் பொறுப்பதிகாரியான திரு ரவிந்திர அம்பேபிட்டிய அவர்களை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டும் மற்றும் எழுத்து மூலமாகவும் முறையீடு செய்யபட்டுள்ளதாக திரு நந்தசேன உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

   இது தொடர்பில் செய்தி அறிக்கையிடும் லங்காதீப வலைத்தலமானாது, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய காவல்துறை அதிகாரியை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு இது தொடர்பில் வினவியபோது அவர் கூறிய விடயமாவது "என்னிடம் கேட்காமல் ஏன் அச்செய்தியை பிரசுரித்தீர்" என்று குறிப்பிட்ட ஊடகவியலாளரிடம் கேட்டதாகவும் தான் எவ்விதத்திலும் அவரை அச்சுறுத்தவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஊடகவியலாளரினால் மேற்கொள்ளபட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முந்தைய நிகழ்வுகள்/சம்பவங்கள் தொடர்பான முன்னேற்றங்கள்:

முகபுத்தகத்தில் வெளியிடப்பட்ட சிறுகதை காரணமாக ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட எழுத்தாளரான சக்திக்க சத்குமாரவை நீதிமன்றம் நிரபராதி என தீர்பளித்து அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட வழக்கில் இருந்து அவரை விடுவித்தது.

தனது முகப்புத்தகத்தில் பதிவிட்ட "அர்த" எனும் சிறுகதை தொடர்பில் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டிருந்த எழுத்தாளர் சக்திக்க சத்குமார குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து நிரபராதி என பொல்கஹவெல மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதிபதி பெப்ரவரி 9 ஆம் திகதி உத்தரவிட்டார்.குறிப்பிட்ட வழக்கை முன்தொடர்ந்து செல்வதற்கான போதுமான காரணிகள் இல்லை என்பதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியமையே இத்தீர்பிற்கான விசேட காரணியாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவத்தின் காரணமாக எழுத்தாளர் சக்திக சத்குமார இரண்டு வருடங்களுக்கும் மேலாக பல சிரமங்களை எதிர்கொண்டதுடன், 4 மாதங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தும்,பத்து மாதங்களுக்கு மேலாக வேலையில்லாமல் இருப்பதற்கும் நேரிட்டது.

சுதந்திர ஊடக இயக்கம் இந்த சம்பவம் குறித்து ஆரம்பத்தில் இருந்தே இந்த செயற்பாடானது நியாயமற்ற கைது நடவடிக்கை என்பதை தமது நிலைபாடாக கொண்டிருந்ததுடன் சக்திக்க கைதுசெய்யப்பட்ட போது அது தொடர்பில் தமது கண்டனத்தை 2019 ஏப்ரல் 2 ஆம் திகதி ஊடக அறிக்கையொன்றின் மூலமும் வெளியிட்டது, அந்த அறிக்கையில் இந்த நியாயமற்ற செயற்பாடானது இலங்கை, ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையில் கையோப்பமிட்டு சர்வதேச சமூக மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் நோக்கத்திற்கு முற்றிலும் எதிரான செயற்பாடே இந்த நடவடிக்கை அமைந்துள்ளது என்பதை குறித்த அறிக்கையானது தெளிவாக குறிப்பிட்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு சக்திக சார்பாக முறைப்பாடு செய்யப்பட்டதுடன் இந்த முறையீட்டை விசாரித்த " நியாயமற்ற முறையில் கைதுசெய்யப்படுதல் தொடர்பில் செயற்படும் செயற்குழு" 2019 டிசம்பர் மாதம் தமது கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது. "சட்டபூர்வமான முறையில் தனிமனித கருத்துக்களை வெளிப்படுத்தும்." சுதந்திரத்தை தடுக்கும் விதமாக ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தை துஷ்பிரயோகப்படுத்தும் ஒரு செயற்பாடே

சக்திக சத்குமாரவின் கைது நடவடிக்கை என குறித்த கண்காணிப்பு அறிக்கை குறிப்பிடுகின்றது.

(Mr. Sathkumara's arrest is part of a pattern of abusive applications of the ICCPR Act that serve to suppress a large swath of legitimate forms of individual expression.)

சக்திக்கவை நிரபராதி என விடுவிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பிற்கு அடுத்த நாள் (2021 பெப்ரவரி 10) சுதந்திர ஊடக இயக்கம் பொலிஸ்மா அதிபரிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியதுடன் அக்கடிதத்தில் குறிப்பிடபட்ட விடயமாவது , "எழுத்தாளர் சக்திக்க சத்குமாரவின் வழக்கு தீர்ப்பை முன்னுதாரணமாக கொண்டு ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தி காவல் துறையினரால் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற கைது செயற்பாடுகளை நிறுத்துமாறு" கேட்டுக்கொள்ளபட்டதுடன், மேலும் இக்கடிதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பொலிஸ்மா அதிபரிக்கு ஐ.சி.சி.பி. ஆர் சட்ட பாவனை தொடர்பில் முன் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இங்கு விசேடமாக நினைவு கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிதி முறைகள்/சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பில் சட்டவிதிமுறை தலைப்பில்/பகுதி கூறுக்குள் உள்ளடக்கப்படும் ஐந்து நிகழ்வுகள்.:.சம்பவங்கள் பெப்ரவரி மாத அறிக்கையில் கண்காணிக்கபட்டு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அந்த நிகழ்வுகள் சட்டரீதியான நடவடிக்கை,ஊடக சுதந்திரத்திற்கு கட்டுபாடுகள் விதித்தல்,ஊடக உள்ளடகத்தை தணிக்கை.:.துண்டித்தல் செய்தல் மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற துணை தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இந்த நிகழ்வுகள்.:.சம்பவங்களின் 04 நிகழ்வுகள் பெப்ரவரி மாதத்தில் நடைபெற்ற புதிய சம்பவங்களாகவும் அடுத்த ஒன்று முந்தைய கால நிகழ்வின் முன்னேற்ற போக்காகவும் காணப்படுகின்றது.**

**அட்டவணை 3: 2021 பெப்ரவரி: சட்ட விதிமுறைகள் – நிகழ்வுகள் 05**

| இலக்கம் | நிகழ்வு/சம்பவம் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள்/சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தல் | 02 |
| 02 | கருத்து தெரிவித்தல் தொடர்பாக சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதித்தல் | 01 |
| 03 | ஊடக உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதற்கு எதிரான சட்டரீதியான வெற்றி | 01 |
| 04 | தகவல் அறியும் உரிமை | 01 |
| | **மொத்தம்** | **05** |

## பெப்ரவரி மாதத்திற்கான புதிய நிகழ்வுகள்/சம்பவங்கள்:

1. **வடக்கில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளினால் ஏற்பாடு செய்யப்பட எதிர்ப்பு போராட்டங்களை தடுப்பதற்காக காவல்துறையால் பிறப்பித்த நீதிமன்ற தடை உத்தரவையும் தாண்டி ஒன்றுகூடுதல் மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமையைப் பாதுகாத்தல். (மட்டகளப்பை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மூன்று பேருக்கும் இத்தடை உத்தரவானது காவல்துறையினால் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது)**

   வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளினால் பல கருத்துக்கள்,பிரச்சினைகளை மற்றும் கோரிக்கைகளை முன்வைத்து பெப்ரவரி 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை எதிர்ப்பு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் பொருட்டு பல்வேறு நபர்களுக்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவை பெற்றுக்கொள்வதற்காக காவல்துறையினர் நடவடிக்கை எடுத்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளுக்கும் இந்த நீதிமன்ற தடை உத்தரவு பிரபிக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

   கலுவாஞ்சிகுடி மாஜிஸ்திரேட் நீதிமன்ற வழக்கு எண் AR/31/2021 தொடர்பில் வெளியிடப்பட்ட தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாவது **"குறிப்பிட்ட எதிர்ப்பு ஆர்பாட்டத்தை நிறுத்த தடை உத்தரவை விதிக்ககோரி காவல்துறையினரால் முன்வைத்த காரணங்களாக குறிப்பிடப்படுவது கொரோனா தொற்றுநோய் மிக வேகமாக பரவுதல், அரசாங்கத்திற்கு எதிராக மக்களை தூண்டுவதின் காரணத்தினால் இன மத நீதியான பிளவுகள் ஏற்பட காரணமாக அமையக்கூடும் என இந்த கௌரவ நீதின்மன்றமானது ஏற்றுக்கொள்வதன் விளைவாக, 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க,குற்றவியல் நடைவடிக்கை முறைச் சட்டக்கோவையில் 106(1) பிரிவிற்கு அமைய ,கழுவாஞ்சிகுடி காவல் துறை பொறுப்பு அதிகாரி (OIC) உ.பொ.அ உபுல் குணவர்த்தனவின் கோரிக்கைக்கு அமைய"** நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

   இந்த தடை உத்தரவானது மக்களின் ஜனநாயகரீதியான ஒன்றுகூடல் மற்றும் போராட்டங்களில் ஈடுபடுதற்கான உரிமையை மீறும் செயல்பாடாக கருதப்படுவதுடன் ஊடகவியலாளர்கள் மூவருக்கும் இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அறிக்கையிடுவதற்கு எவ்விதமான தடை உத்தரவுகளும் காணப்படவில்லை என்பதுடன் ஊடகவியலாளர் மூவரும் போராட்டத்தை ஏற்பாடு செய்த சிவில் மற்றும் அரசியல் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களாக அல்லது ஆர்வலர்களாக இருந்தமையே தடை உத்தரவு பிறப்பிக்கபட்டமைக்கு காரணமாக கொள்ளப்படுகின்றது. மட்டகளப்பை சேர்ந்த ஊடகவியலாளர்களான புண்ணியமூர்த்தி சசிகரன்,நிலாந்தன் மற்றும் சயன் என்ற மூன்று பேருக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை செயற்படுத்த வேண்டாம் என நீதிமன்ற தடை உத்தரவு பிறபிக்கபட்டிருந்தது

குறிப்பிடத்தக்கது. சசிகரன் என்பவர் சக்தி டிவி,சிரச டிவி மற்றும் வீரகேசரி போன்ற ஊடகங்களின் மட்டக்களப்பு பிராந்திய நிருபராக கடமையாற்றுவராகவும் நிலாந்தன் என்பவர் நீலகண் செய்தி வலைத்தளத்தில் ஊடகவியலாளராகவும் சயன் என்பவர் பட்டி நிவுஸ் செய்தி வலைத்தளத்தில் ஊடகவியலாளராகவும் பணியாற்றுகின்றனர்.எனினும் நீதிமன்ற தடை உத்தரவை மீறி போராட்டம் நடைப்பெற்றதுடன் ஊடகவியலாளர்கள் போராட்டத்தை ஊடகங்களில் அறிக்கையிடவும் செய்தனர். இந்த தடை உத்தரவானது கருத்து தெரிவிக்கும் உரிமையை சட்டரீதியாக தடுக்க முற்பட்ட செயலாக கருதப்படுவதுடன் ஆனாலும் அந்த தடைகளை சவாலுக்கு உட்படுத்திய செயலாக போராட்ட நிகழ்வானது காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊடகவியலாளருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை தொடர்பில் அவதானிக்கும் போது கண்டுகொள்ள கூடிய விடயமாவது மேலே குறிப்பிட்ட ஊடகவியலாளர்கள் மூவரினதும் சிவில் சமூக வகிபாகங்கள்,செயற்பாடுகள் மற்றும் அரசியல் பின்னணி என்பனவையே இத்தடை உத்தரவிற்கான காரணமாக உள்ளதுடன், சசிகரன் என்பவர் ஊடகவியலாளராக கடமையாற்றுவதுடன் மட்டுமல்லாமல் அரசசார்ப்பற்ற தொண்டு நிறுவனத்தின் அமைப்பாளராகவும் செயல்படுகின்றார்.மேலும் அவர் மற்றும் சயன் இரண்டு பேரும் தேர்தல் வேட்பாளர்களாகவும் கடந்த காலங்களில் போட்டியிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தடை உத்தரவானது அவர்களின் தனிப்பட்ட பெயர்களில் வெளியிடப்பட்டுள்ளதுடன் காவல்துறையினர் குறிப்பிடுவதாவது அவர்கள் மூவரும் ஆர்பாட்ட செயற்பாடுகளில் அமைப்பாளர்களாக செயற்பட்டமையே தடை உத்தரவிற்கான காரணமாகவும் குறிப்பிடுகின்றனர்.

2. **இலத்திரனியல் மற்றும் புதிய ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகளை உள்ளடக்கிய விதமாக இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை அனுப்பிவைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை சட்டத்தில் நிறுவப்பட்ட இலங்கை பத்திரிகை பேரவையை கட்டமைப்பு ரீதியாக சீர்திருத்தம் செய்து இலத்திரனியல்,அச்சு பதிப்பு மற்றும் புதிய ஊடகங்களை உள்ளடக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் தொடர்பாக தீர்ப்பாயக நிறுவனமாக மீளமைப்பு செய்யும் நோக்கில், தற்போது காணப்படும் சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பாக ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்களின் கருத்து மற்றும் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் ஊடகங்களில் மூலமாக விளம்பரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2020 பெப்ரவரி 07ஆம் தேதியிட்ட அரசாங்க தகவல் திணைக்கள இணையதளத்தில் மற்றும் செய்திபத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த குறித்த விளம்பரத்தின்படி அது தொடர்பான கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சமூக ஊடகத்திற்கு தீங்கு விளைவிக்ககூடிய சட்டங்களை உள்ளடக்கிய மற்றும் அரசுக்கு வேண்டிய விதத்தில் அமைக்கப்பட்ட இலங்கை பத்திரிகை பேரவையை கலைக்க அல்லது ரத்து செய்ய வேண்டியே சுதந்திர ஊடக இயக்கமானது ஆரம்பத்தில் இருந்தே கோரிவந்ததுடன் அதேயையே சுதந்திர ஊடக இயக்கத்தின் நிலைப்பாடாகவும் கொண்டுள்ளது. இலங்கை பத்திரிகை பேரவை தொடர்பில் அவ்வப்போது பல்வேறுபட்ட மாற்று பரிந்துரைகளையும் சுதந்திர ஊடக இயக்கம் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஊடக சமூகத்தில் காணப்படும் கருத்துக்களின் உடன்பாட்டுடன் கூடிய ஒழுங்குமுறையொன்றை கட்டியெழுப்புவதை தவிர அரசாங்கத்தால் உண்டாக்கபடும் ஒழுங்குமுறை செயற்பாட்டு நடவடிக்கைக்கு மற்ற பெருபான்மையான ஊடக அமைப்புகளும் ஒத்துழைக்க மாட்டார்கள் என்பதே சுதந்திர ஊடக இயக்கத்தின் புரிதலாகும். அது அப்படி இருக்க இலங்கை பத்திரிகை பேரவையின் நோக்கம்,செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தி அதனை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தும் தருணத்தில் அதற்கு மாற்று வழியாக முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் ஊடக சமூகத்தில் மத்தியில் கலந்துரையாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

3. **இலங்கையில் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 4 வருட ஆண்டு பூர்த்தியை ஒட்டி தகவல் ஆணையத்தால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.**

பெப்ரவரி 3 ஆம் திகதி தகவல் அறியும் உரிமை இலங்கையில் இயற்றப்பட்டு நான்கு வருட நிறைவை கொண்டாடியதுடன் அதை ஒட்டி தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணையகத்தினால் ஜனவரி-பெப்ரவரி வரையான காலப்பகுதியில் கருத்தரங்குகள் மற்றும் பட்டறை தொடர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.குறித்த அறிக்கையில் கருத்தரங்கு தொடர்பான விளக்கங்களும் மற்றும் ஆணையகத்தின் எதிர்கால திட்டங்களும் ஆராயப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டத்தின் கீழ் தகவல்களை வழங்குவதில் பொது அதிகாரிகளினால் ஏற்படுத்தபடும் தாமதம் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதாகவும், சட்டத்தின் கீழ் தமது அதிகாரபூர்வ கடமையை செயற்படுத்தாமை மற்றும் வேண்டுமென்றே தாமதப்படுத்தல் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய அதிகாரிகளுக்கு எதிராக சட்டரீதியாக உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி ஆணையகம் ஒரு அறிவிப்பை அனுப்பிவைக்கும் என்பதாகவும் , சட்டத்தின் மூலம் ஆணையகத்திற்கு காணப்படும் அதிகாரத்தை கொண்டு அவ்வகையான தரப்பினருக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்பதையும் அது தொடர்பில் ஆணையகம் எவ்விதமான தயக்கமும் இன்றி செயற்படும் என்பதையும் குறிப்பிட்ட அறிக்கையில் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

4. **எல்.ரீ.ரீ.ஈ இயக்க தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படம் உள்ளடங்கிய காணொளிப்பதிவொன்றை டிக்டொக் சமூக ஊடகத்தில் பதிவேற்றம் செய்தமை தொடர்பில் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் வத்தளை பிரதேசத்தில் வைத்து காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளமை.**

22 ஆம் திகதி பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் (TID) வத்தளை பிரதேசத்தில் வைத்து இந்த இளைஞரை கைது செய்தனர். பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹன ஊடகங்களுக்கு குறிப்பிட்டதாவது, முல்லைத்தீவை பிறப்பிடமாக கொண்ட இந்த இளைஞர் தற்போது ஹட்டன் பிரதேசத்தை வதிவிடமாக கொண்டவராகவும் காணப்படுகின்றார். அவர் பதிவேற்றம் செய்த காணொளிப்பதிவானது எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தை போசிக்கும் விதமாக காணப்படுவதாகவும்,அவரை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் தடுப்பு காவல் உத்தரவை பெற்று அவரை விசாரித்துவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சமூக ஊடகங்களில் பதிவேற்றப்படும் வெவ்வேறு பதிவுகள் காரணமாக இலங்கையில் பல்வேறு பகுதிகளில்

அவ்வப்போது மக்கள் கைது செய்யப்படுவது தொடர்பில் அறிக்கையிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கூட தற்போது காணப்படும் சூழலில் இது போன்ற சம்பவங்கள் பற்றிய சுயாதீன மூலாதாரங்களின் இருந்து தகவல் சேகரிப்பானது மிக கடினமாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

https://bit.ly/3bWDcfF (அத தெரண இணையதளத்தில் வெளியிடப்பட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹானவின் அறிக்கை)

## முந்தைய நிகழ்வுகள்/சம்பவங்கள் தொடர்பான முன்னேற்றங்கள்:

**2008 ஆம் ஆண்டு தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி ஊடாக ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சியை இடைநிறுத்தியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட இரு அடிப்படை உரிமை மனுக்கள் நீதிமன்றத்தில் வெற்றிகொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

நவம்பர் 4, 2008 அன்று ஒளிபரப்பப்பட்ட நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சியான "இரா அந்துரு பட"வின் திடீர் தணிக்கைக்கு எதிராக 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் (எண் 556/2018 மற்றும் 557/2018) தொடர்பான வழக்கு தீர்ப்பு. பெப்ரவரி 17 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அடிப்படை உரிமை மனுக்களை அப்போதைய சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளரான உவிந்து குருகுலசூரிய மற்றும் ராவய செய்திபத்திரிகையில் முன்னாள் செய்தி ஆசிரியரும், சுதந்திர ஊடக இயக்கத்தின் உறுப்பினருமான ஜயசிறி ஜயசேகர ஆகியோரினால் குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த நேரடி ஒலிபரப்பு கலந்துரையாடல் மன்றத்திற்கு அழைப்பாளராக பங்குபற்றிய உவிந்து குருகுலசூரிய, குறிப்பிட்ட தணிக்கை செயற்பாடானது தனது கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை மீறியுள்ளதாகவும் , ஜயசிரி ஜயசேகர தொலைகாட்சி பார்வையாளராக தனது தகவல் அறியும் உரிமையை மீறியதாகவும் தமது மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர். ஜனாதிபதி வழக்கறிஞ்சர் ஜே.சி வெலிஅமுன மனுதாரர்களின் வழக்கறிஞராக செயல்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட தணிக்கை காரணமாக மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன் மனுதாரர்களுக்கு தண்டப்பணமாக தலா ரூபா.30,000 படி இரு மனுதாரகளுக்கு வழங்குவதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கும், தலா ரூபா 50,000 படி இரு மனிதாரர்களுக்கு வழங்குமாறும் அப்போதைய ரூபவாஹினி கூட்டுதாபனத்தின் தலைவரான பேராசிரியர் ஆரியரத்ன எத்துகலவிற்கும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பில் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமை, அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விமர்சிக்கும் உரிமை, நீதிமன்ற அவமதிப்பு, பார்வையாளர்களின் உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை பற்றிய பல முக்கிய பகுதிகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தை விமர்சிப்பது தணிக்கைக்கு ஒரு காரணமாக இருக்கக்கூடாது என்பதை இத்தீர்பானது வலியுறுத்துவதுடன், ரூபவாஹினி சட்டத்தின் கீழ் நிகழ்ச்சிகளின் தரம் தொடர்பாக குறிப்பிடப்படும் பிரிவுகளும் கவனத்தில் கொள்ளபடுகின்றது.இந்த தீர்ப்பானது பார்வையாளரின் தகவல் உரிமையை இரண்டாவது முறையாகவும் உறுதிப்படுத்தும் தீர்ப்பாக காணப்படுகின்றமை வரவேற்றதக்கதாகும்.

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள் ,தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25